## செப்டம்பர் 15

## புனித மரியாவின் துயரங்கள் (தூய வியாகுல அன்னை) விழா

### திருப்பலி முன்னுரை

வானளவு உயர்ந்த உள்ளம், கடலளவு அளந்த கருணை, வெறுப்பைக் காட்டாது அன்பை மட்டுமே அள்ளிக் கொடுக்கும் அமுத சுரபி - தாய். அத்தகைய தாயாம் அன்னை மரியாளின் வியாகுலத்தை நினைவு கூரும் இந்நாளில், தனயனின் கனவை நனவாக்க, தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற, தன்னையே அர்ப்பணித்தவர் நம் அன்னை மரியா.

நம் தாய் மரியாள் பட்ட துன்பங்கள், வியாகுலங்கள் ஏழு அல்ல, ஏராளம். சந்தித்த இடர்கள் தாராளம். துன்பத்தை கூட அன்னை மரியாள் முழுமையாக வாழ்க்கை முழுவதும் அனுபவித்தார். தான் சந்தித்த ஒவ்வொரு வியாகுலத்திலும் தன்னை ஒரு நிலையில் நிறுத்தி அந்நிலையை நமக்கும் தெளிவுபடுத்துகிறார்.

- "உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும்" என்பதில் எதிர்கால அபய நிலை,
- இரவிலேயே எகிப்துக்கு புறப்பட்டு போ என்பதில் அகதிகளின் நிலை,
- குழந்தையைக் காணாது தேடுதலில் தனயனை இழந்த தாயின் நிலை,
- சிலுவைப் பயணத்தில் கண்ணீரால் துணிவூட்டும் மக்கபேயர் தாயின் நிலை,
- சிலுவை அடியில் துன்பத்திலும் துணிவோடு நிற்கும் பரிதாப நிலை,
- மரித்த மகனை சுமக்கையில் வாழ்வே இருண்ட நிலை.
- கல்லறையில் அடக்கம் செய்கையில் தனிமையில் தவிக்கும் கையறு நிலை.

இப்படியாக ஏழு வியாகுலங்களையெல்லாம் நமக்கு மீட்பாக மாற்றிக் கொடுக்கிறார் நம் அன்னை மரியா. அன்னையின் உள்ளத்தைத் தைத்தது துன்பம் தரும் அம்புகள், வாள்கள் அல்ல. மாறாக அவைகள் "மண்ணை ஊடுருவிச் செல்லும் வரங்கள்".

தன் தனயனின் பிரிவை ஏங்கி துடிக்கும் ஒரு தாயின் மனக்குமுறல்களை நினைவுபடுத்தும் இந்நாளில், நமது அன்னையரையும் கண்ணோக்கிப் பார்த்து அவர்களின் துன்பங்களைக் குறைக்கவும், அன்னையரைப் பெருமைப்படுத்தவும் பிள்ளைகளாக வாழ வரம் வேண்டி இப்பலியில் இணைவோம்.

### மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

வியாகுல அன்னையின் மைந்தனே இறைவா! திருஅவை முன்னேடுக்கும் எல்ல நல்ல காரியங்களிலும், அன்னையின் வேண்டுகோளுக்கிணங்க 'அவர் சொல்லுவது

போல’ நீர் விரும்புவது போல செயலாற்ற அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

வியாகுல அன்னையின் மைந்தனே இறைவா! அர்ப்பண அன்பர்கள் அதன் அர்த்தத்தின் முழுமையை உணர்ந்து, முழு மனித குல மீட்புக்காக அர்ப்பணித்து வாழ, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

வியாகுல அன்னையின் மைந்தனே இறைவா! குடும்பத்தின், திருமணத்தின் மாண்பினை காத்து, எல்லா வியாகுலங்களிலும், பிரமாணிக்கம் தவறாது பயணிக்க, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

வியாகுல அன்னையின் மைந்தனே இறைவா! பெண்மையை போற்றி மதித்து, பெண்சிசுக்களு; சமூகத்தில் வாழ உரிமை பெற்றவர்களே என்பதனை உணர்ந்து, கரு அழிப்பு, கலைப்பு செய்யாது நீர் தரும் பரிசினை போற்றி பாதுகாத்திட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

வியாகுல அன்னையின் மைந்தனே இறைவா! பிறப்பு கொடை, பரிசு, செல்வம் என்பதனை உணர்ந்து அறிந்து, பிறப்பின் அர்த்தம் நிலைநாட்டப்பட, உமது திருவுளம் அறிந்து நடந்திட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com